கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 22ம் தேதி வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண். 2 /2025
இன்
அசல் வழக்கு எண்.147/2012
-----

கருப்பாயி ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1) பெரியகருப்பன் (இறப்பு)
2) சுப்பையா (இறப்பு) ... பிரதிவாதிகள்
3) கலா
4) சுதா
5) சுந்தரகொடி
6) சுரேஷ்
7) பிரகலாதன்
8) மணிமாறன் (இறப்பு)
10) மைனர். தர்ஷன்
11) தேவி
12) அசோகன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 22.08.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர்

திரு.K.P.S.இளங்கோவேல்ராஜன் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

<u>**உத்தரவு**</u>

மனுதாரர்/வாதி தரப்பில் மதுரை மாவட்ட தெற்கு சார்பதிவாளர் அலுவலக வளாகம், மதுரை மாவட்ட தெற்கு சார்பதிவாளரை சாட்சியாக விசாரிக்க, பட்டியல் ஆவணங்களை சமர்ப்பித்து நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப உத்தரவிட வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>**மனுவின் சுருக்கம்**</u> :

இந்த வழக்கின் மனுதாரராகிய கருப்பாயி என்பவர் தனது மனுவில் Doc.No.3331/1981 இல் உள்ள விற்பனைப் பத்திரம் தொலைந்து போனது என்றும், மேலும் இந்த வழக்கின் சான்றளிக்கப்பட்ட நகலை மனுதாரர் சமர்ப்பித்ததாகவும், மனுதாரர் தனது வயது காரணமாக தான் ஒரு மூத்த குடிமகனாக இருந்தாலும், Doc.No.3331/1981 இன் அசல் விற்பனைப் பத்திரத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், ஆனால் பிரதிவாதிகள் Doc.No.3331/1981 ஆவணத்தின் உண்மைத்தன்மையை எழுப்பினர் என்றும், எனவே, மேற்கூறிய நபரை நீதிமன்றத்தில் வரவழைத்து விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியும் என்றும்,

மேற்கூறிய வழக்கில் மதுரை தெற்கு சார்பதிவாளரை வரவழைத்து விசாரிப்பது முக்கியமான ஒன்று என்றும், எனவே, மனுதாரர் தரப்பில் மதுரை மாவட்ட தெற்கு சார்பதிவாளரை சாட்சியாக ஆவணங்களுடன் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

4. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>** :

5. அசல் மனுவானது மதுரை தெற்கு சார்பதிவாளரை வரவழைத்து இந்நீதிமன்றத்தில் ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க உத்திரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இந்நிர் மனுதாரர்/வாதி, Doc.No.3331/1981 இல் உள்ள விற்பனைப் பத்திரம் தொலைந்து போனது என்றும், மேலும் இந்த வழக்கின் சான்றளிக்கப்பட்ட நகலை மனுதாரர் சமர்ப்பித்ததாகவும், மனுதாரர் தனது வயது காரணமாக தான் ஒரு மூத்த குடிமகனாக இருந்தாலும்,

Doc.No.3331/1981 இன் அசல் விற்பனைப் பத்திரத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள ஆவணமானது 1) கருப்பாயி பெயரில் உள்ள விற்பனை கிரைய ஆவண எண்.3331/1981. 2) ஆவண எண்.3331/1981 வில்லங்க சான்றிதழ் ஆகும். எனவே, மனுதாரர் தரப்பில் மதுரை தெற்கு சார்பதிவாளரை சாட்சியாக ஆவணங்களுடன் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்ப வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7. உரிமையில் நடைமுறை விதி 75ன்படி, அரசு அலுவலத்திலிருந்து ஒரு ஆவணத்தை நீதிமன்றம் மூலம் பெறுவதற்கு முன்பாக உரிய அலுவலகத்தில் மனுதாரர் மனு செய்து மனுதாரருக்கு உரிய ஆவணம் கிடைக்காத நிலையிலேயே, மேற்படி விதி 75ன் கீழ் மனு தாக்கல் செய்ய முடியும். இந்நிலையில், மனுதாரர் மனுவில் கூறியுள்ள வில்லங்க சான்றிதழானது உரிய சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்யும் நிலையில், எளிதாக கிடைக்கக்கூடிய ஆவணம் ஆகும். மேலும், 1வது ஆவணத்தை பொறுத்து மனுதாரர் கூறும் கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலானது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், மீண்டும் மேற்படி கிரைய ஆவணத்தை மதுரை தெற்கு சார்பதிவாளர் கொண்டு வர வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் கூறியுள்ளது சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

8. மேற்படி, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கிரைய ஆவணம் 3331/1981 சான்றிட்ட நகல் குறித்து சார்பதிவாளர் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் சட்டப்படியாக ஏற்கத்தக்கதாக இல்லை. இம்மனுவானது உரிமையியல் நடைமுறை விதி 75ன் கீழ் முறையாக தாக்கல் செய்யவில்லை. எனவே, மதுரை தெற்கு சார்பதிவாளரை சாட்சியாக விசாரணை செய்வதற்கான அடிப்படை முகாந்திரம் எதுவும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி நிலைத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து நிராகரித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவானது நிராகரித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.22 19:16:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**<u>இணைப்பு:</u>**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.22 19:16:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 2 /2025
அசல் வழக்கு எண்.147/2012
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 22.08.2025